**Jazz Up #USASL70 க்காக Wycliffe Gordon கொழும்பில்**

அமெரிக்க இலங்கைப் பங்காண்மையின் 70 வருடக் கொண்டாட்டங்களுக்காக அமெரிக்க jazz sensation Wycliffe Gordon உடனும் அமெரிக்க தூதரகத்துடனும் இணையுங்கள் (#USASL70).

பிரசித்தி பெற்ற Wycliffe Gordon மற்றும் அவரது சர்வதேச நட்சத்திரங்களும் பெப்ரவரி 24 - 28 வரைக்குமான காலப்பகுதியில் இலங்கைக்கான தமது சுற்றுப்பயணத்தை மேற்கொள்வதுடன் அமெரிக்க இசை நயத்தை கடல் கடந்து கொண்டு வந்து கொழும்பு, காலி, மாத்தறையில் மாபெரும் நிகழ்வுகளை மேடையேற்றவுள்ளனர்.

பின்வரும் ஏதேனும் இலவச பொதுமக்கள் நிகழ்வொன்றுக்கு வருகை தந்து Wycliffe #USASL70 உடன் இணைந்து கொள்ளுங்கள்:

**பெப்ரவரி 24, 2018**

| | |
|---|---|
| 12:30 | கோட்டை புகையிரத நிலையம், கொழும்பு (25 நிமிடங்கள்) |
| 17:00 | கொழும்பு காலிமுகத்திடல் (25 நிமிடங்கள்) |
| 18:30 | விஹாரமாதேவி பூங்கா, கொழும்பு (25 நிமிடங்கள்) |

**பெப்ரவரி 26, 2018**

| | |
|---|---|
| 12:30 | ஒல்லாந்தர் வைத்தியசாலை, உலக வர்த்தக மையத்திற்கு எதிரே, கொழும்பு (25 நிமிடங்கள்) |
| 16:00 | வேக்கந்த வீதி, கொழும்பு 2 (25 நிமிடங்கள்) |

**பெப்ரவரி 27, 2018**

| | |
|---|---|
| 17:00 | காலி கோட்டை (60 நிமிடங்கள்) |

Wycliffe ஒரு பிரசித்தி பெற்ற இசையமைப்பாளரும், பாடலாசிரியரும், இயக்குனரும், ஒழுங்குபடுத்துனரும் ஆவார். இவர் Wynton Marsalis Septet இன் ஒரு பெயர் பெற்ற உறுப்பினராகவும், Lincoln Center Jazz Orchestra பூர்வ உறுப்பினராகவும் உள்ளார். அவரது "Jazz a la Carte" நிகழ்ச்சியை jazz வரலாற்றின் மிகச் சிறந்த ஐந்து தருணங்களில் ஒன்றாக Wall Street ஏடு பெயரிட்டுள்ளது. அவர் தற்போது Georgia வின் Augusta விலுள்ள Georgia Regents பல்கலைக்கழகத்தில் வதிவிட கலைஞராக உள்ளார்.